செய்தி வெளியீடு எண். 6/2019 நாள் 30.01.2019

## அம்பத்தூரில் குடிநீர் / கழிவுநீர் இணைப்பு பெற சிறப்பு முகாம்

-----

அம்பத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட பணிமனை–79 முதல் 82 மற்றும் 85 பகுதிகளில் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் ராம்நகர், லெனின்நகர், விநாயகபுரம், விஜயலட்சுமிபுரம், கிருஷ்ணாபுரம், வெங்கடாபுரம், சோழபுரம், ஞானமூர்த்தி நகர், ஈ.பி.காலனி, மேனாம்பேடு, ஒரகடம், புதூர், பானுநகர், கள்ளிக்குப்பம், வரதராஜபுரம், ராமாபுரம், சம்தாரியாநகர், காமராஜபுரம் மற்றும் டீச்சர்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் முடிவடைந்துள்ளது.

ஆகவே, கட்டிடங்களுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கு 02.02.2019 அன்று காலை 10.00 மணி முதல் பகல் 2.00 மணி வரை சென்னை–53, எண் 26, அம்பத்தூர்– ஒரகடம் சாலையில் உள்ள **பத்மாவதி ஹால் R.S திருமண மண்டபத்தில்** சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் இந்த வசதியை பயன்படுத்தி குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பத்தை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பிற்கான தொகையை வரைவுக் காசோலை / பணமாகவும் (Demand Draft / in favour of CMWSSB/ Cash) சென்னைக் குடிநீர் வாரிய சிறப்பு முகாமிலேயே செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்